# TNPSC GROUP II MAIN EXAM

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு (Type A)

**Total Marks: 50** **Time : 1 ½ hrs**

**கேள்வி எண் 1:** **15 மதிப்பெண்கள்**

**பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் திருக்குறள்
2. அன்றாட வாழ்வியலோடு திருக்குறள் தொடர்புத்தன்மை
3. மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்
4. திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம் மனிதநேயம் முதலானவை
5. சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு
6. திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்

**கேள்வி எண் 2:** **5 x 2 = 10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைக் கவனமாக படித்து அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக**

**சங்கரதாசு சுவாமிகள்**

நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகளி, நாடகங்களை உரவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழநி தணடபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று, வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கி விட்டார். இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடத்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்வராயிருந்த சுவாமிகளின் ‘‘சந்தக்குழிப்புகளின்’’ சொற்சிலம்பங்களைக் கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.

சங்கரதாசு சுவாமிகள் ‘‘சமரச சன்மார்க்க சபை’’ என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடாகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். நாடக மேடை, நாகரிகம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள், 1918இல் ‘‘தத்துவ மீனாலோசனி வித்துவ பால சபை’’ என்னும் நாடகம் அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த கலைஞர்கள், ‘‘தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்’’ என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

1. நாடக ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், முதல்வராகவும் விளங்கியவர் யார்?
2. சங்கரதாசு சுவாமிகள் எந்தெந்த வேடங்கள் புனைந்து நடித்தார்?
3. சங்கரதாசு சுவாமிகள் உருவாக்கிய சமரச சன் மார்க்க சபை என்ற நாடகக் குழுவில் பயிற்சி பெற்று நாடகத்துறையில் பெரும்புகழ் பெற்றவர் யார்?
4. டி. கே. எஸ் சகோதரர்களை உருவாக்கிய நாடக அமைப்பு எது?
5. ‘‘தமிழ் நாடகத் தலைமையாசிரியர்’’ - யார்?

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

**கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை**

## இடஒதுக்கீடு

இட ஒதுக்கீடு சமுதாயத்தில் அழுத்தப்பட்ட பகுதி சார்ந்த, சமூகத்தில் பின் தங்கியுள்ள மக்களை சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக முன்னேற்றவும் அரசின் வளங்கான கல்வி, வேலைவாய்ப்பு, நிரவாகம் ஆகியவற்றில் பய்களிக்க வாய்ப்பு அளிக்கப்படும் ஒரு முறையாகும்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் காலங்காலமாக ஒதுக்கப்பட்டு வந்த மக்களை இனம், சாதி, பிறப்பிடம், நிறம், மதம், பொருளாதார சூழல், உடல் நிலைகளில் குறைபாடு போன்ற காரணங்களால் வாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

எடுத்துக்காட்டாக பெண்கள் பல சமூகங்களில் படிப்பு, வேலை இல்லாமல் வீட்டு வேலையே செய்து அவர்களின் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பின்றி சமூக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பின்தங்கியே உள்ளனர். கிராமப்புற மக்கள் புதிய பொருளாதார வணிக வளர்ச்சியுற்ற காலத்தில் பல படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற முடியாமல் இழக்க வாய்ப்புள்ளது. சில நாடகளில் இனப் பேராதிக்கத்தினால் இட ஒதுக்கீடு இல்லாமல் போகிறது.

இட ஒதுக்கீடு ஆதாவாளர்கள் ஒதுக்கீட தான் சமுதாயத்தின் கடந்த கால கடுமையான ஏற்றத்தாழ்வுகளை களைத்து காலங்காலமாக பல பின்தங்கிய மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்கு ஈடு செய்யும் வழி என்று கருதுகின்றனர்.

அதனால் பல்வேறு மனிதர்கள் எல்லா சாதி, இனம், பாலினம், பிறப்பிடம், கலாச்சாரம், தாய்மொழி, தேசியம் சார்ந்தவர்கள் எல்லா கல்விநிலையம், எல்லா தொழில்கள் என பங்கு பெறும் நிலையை இட ஒதுக்கீடு நியாயமாக்குகிறது.

இட ஒதுக்கீட்டின் எதிர்ப்பாளர்கள் அக்கொள்கை வேண்டத்தகாத பயன்களை கொடுத்து சமூக நலன்களைக் கெடுக்கிறது. என்பர். அதனால் காழ்ப்புணர்ச்சியை வளர்த்து சமூக நல்லிணக்கத்தை குறைக்கிறது என்கின்றனர். மேலும் இடம் ஒதுக்கப்பட்டவர்களுக்கான கல்வி கற்பதன் தரத்தைக் குறைக்க வேண்டியிருக்கும் அல்லது ஒரு பட்டத்திற்கு வேண்டிய திறமையை இல்லாதவரகளுக்குக் கொடுத்து கோளாறு ஏற்படும் அதனால் அப்படிப் பட்டவர்களின் தாழ்வு மனப்பான்மை அதிகரிக்கும் என்று அமெரிக்க ஆய்வாரள் ஒருவர் எழுதியிருக்கிறார்.

புல சமூகத்தினர், நாங்கள் உயர்ந்தவர்கள் என்றும் தங்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டாம் என்றவர்களும் தற்போது இடஒதுக்கீட வேண்டும் என்று போராடும் மனநிலையில் உள்ளனர்.

இந்தியாவில் பிற்படுத்தப்பட்டடோர், பெண்கள், பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ-இந்தியன் ஆகிய பல பிரிவினருக்கு அவர்களின் பிரிவிற்கு ஏற்றபடி இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், தேசிய மகளிர் ஆணையம் போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதற்கான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், தேசிய மகளிர் ஆணையம் போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பட்டியலினத்தோ மற்றும் பழங்குடியினர் ஆணையம், தேசிய மகளிர் மகளிர் ஆணையம் போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் இட ஒதுக்கீட்டின் முன்னோடியாக தமிழ்நாடு உள்ளது. நீதிக்கட்சியின் ஆட்சியில் தொடங்கப் பட்டு 1994 ல் 69 சதவீத இட ஒதுக்கீடு ஒதுக்கீடு காப்பாணை செய்தது வரை, மேலும் 2016 ல் உள்ளாட்சியில் பெண்களுக்கு 50 சதவீது இடஒதுக்கீடு அளித்தது வரை இட ஒதுக்கீட்டில் தமிழகம் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக உள்ளது.

**கேள்வி எண் 4:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலக கடிதம்**

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலிருந்து, அலுவலக ஆணை மற்றும் கடிதங்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்துதல் தொடர்பாக அனைத்து துறைச் செயலாளர்கள், அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அனைத்து துறைத் தலைவர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் உட்பட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயக்குழு ஆகியோர்க்கு கடிதம் ஒன்று எழுதுக.